TAMIL NADU L... LIBRARY
25 செப் 1978
MADRAS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

புதன்கிழமை, 1978 மார்ச், 15.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

கேளிக்கை வரி விலக்கு.

*506 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பேரறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய வேலைக்காரி, ஓர் இரவு, நல்லதம்பி, சொர்க்கவாசல் போன்ற சமுதாய சீர்திருத்த திரைப்படங்களுக்கு தமிழக அரசின் வரி விதிப்பிலிருந்து விலக்கு அளித்திடும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய வேலைக்காரி, ஓர் இரவு, நல்ல தம்பி, சொர்க்க வாசல் போன்ற சமுதாய சீர்திருத்த திரைப்படங்களுக்கு, சில படங்களுக்கு அளிப்பது போன்று வரி விலக்கு அளிக்க இனியாவது அரசு முயற்சி செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அறிஞர் அண்ணா அவர்களுடைய எழுத்தோவியங்கள் மக்க... டையே நிறைந்த செல்வாக்கு பெற்றவை. ஆகையால் அ... களுக்கு வரி விலக்கு அளித்துதான் மக்களிடையே ... வேண்டுமென்ற நிலைமை இல்லை.

திரு. கே. பண்ணை சேதுராம் : தலைவரவர்களே, ... காரி, ஓர் இரவு, நல்லதம்பி, சொர்க்கவாசல் போன்... படங்களுக்கு வரிவிலக்கு அளிக்கவில்லை என்றாலும் ... அவர்களின் கருத்துக்களைப் பிரச்சாரம் செய்கின்... அவைகளை நாடகமாக நடித்துக் காட்டும் நாடக... அரசு மானியம் கொடுக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இயலவில்லை என்பதல்ல அரசின் கருத்து. ஏற்கனவே அந்தப் படங்கள் செல்வாக்கைப் பெற்றவை என்பதுதான் அரசின் கருத்து. வரி விலக்கு அளிப்பதன் மூலம் அதனுடைய பலனை பெறுவது அறிஞர் அண்ணா அவர்களோ அல்லது அவர்களின் குடும்பமோ அல்ல என்பதையும் பார்க்க வேண்டும். நாடக மன்றங்களுக்கு உதவி செய்வது பற்றி தனிக் கேள்வி போடவும்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, அறிஞர் அண்ணா அவர்களின் '' சந்திரோதயம் '', '' சிவாஜி கண்ட இந்து ராஜ்யம் '' போன்ற மிகச் சிறந்த நாடகங்களை திரைப்படங்களாக எடுக்க அரசுத் துறையில் ஏதாவது முயற்சி இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, ..சுத் துறை இதைச் செய்ய முன்வரவேண்டியதில்லை ; தனியார் ...ால் நல்லது.

திரு.

அண்ணா அவ.. ஆர். இராகா : தலைவரவர்களே, அறிஞர் அளிக்காவிட்டன் எழுதிய மற்றப் படங்களுக்கு வரி விலக்கு சாரத்திற்கு ..லும், '' நல்ல தம்பி '' படம் மதுவிலக்கு பிரச் அதை அ..ரு எடுத்துக்காட்டாக இருக்கிறது. ஆகையால் வெளியி...ச வாங்கி, மதுவிலக்குப் பிரச்சாரத்திற்காக அரசே கருத்தைந், மதுவிலக்குக் கொள்கையில் அண்ணா அவர்களின் யாக இ.. பரப்ப அது மதுவிலக்குப் பிரச்சாரத்திற்கு துணை விரும் இருக்கும் என்பதால் அரசு முன்வருமா என்பதை அறிய ..புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அந்தப் படத்தினுடைய உரிமை யார் கையில் இருக்கிறது என்று தெரியவில்லை. ஆனாலும் மதுவிலக்கில் அண்ணா அவர்களும், அதற்குப் பிறகு நம்முடைய புரட்சித் தலைவர் அவர்களும் தீவிரமாக இருக்கிறார்கள் என்பதால் இந்த யோசனை பரிசீலிக்கப்படும்.

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவரவர்களே, அண்ணா ..கள் எழுதிய சொர்க்கவாசல் பண்டார சன்னிதிகளின் அட்ட ..களை விளக்குவதாக இருக்கிறது. அந்த பண்டார ..திகளின் நிலங்களை அரசே எடுத்து, அதை உழுகின்ற விவ ..க்கே கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

..மிகு திரு. ச. இராமச்சந்திரன் : அதற்குத் தனிக் ..ட வேண்டும். கோவில் நிலங்களைப் பொறுத்த ..னவே அண்ணா அவர்கள் நிறைய எழுதி இருக்கிறார் .. பற்றி அரசும் தீவிரமாக சிந்தித்து வருகிறது ..த ஏற்கனவே இங்கே தெரிவித்திருக்கிறோம்.

1978 மார்ச் 15]

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் தன்னுடைய பதிலுரையில் இந்த வரி விலக்கு அளிப்பதன் காரணமாக அண்ணா குடும்பத்திற்கு சலுகை எதுவும் கிடைக்கப்போவதில்லை என்று குறிப்பிட்டார்கள். பேரறிஞர் அண்ணா அவர்களின் குடும்பம் 4½ கோடி மக்களுடைய தமிழ்ச் சமுதாயமாக இருப்பதால், வேலைக்காரி, ஓர் இரவு, நல்ல தம்பி, சொர்க்க வாசல் போன்ற படங்களுக்கு வரி விலக்கு அளிக்க அரசு இனியாவது முயற்சி செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அறிஞர் அண்ணா அவர்களுடைய குடும்பத்தை இந்த 4½ கோடியோடு நிறுத்துவது கூட சரியல்ல. மனித சமுதாயத்திற்கே அவர்கள் சொந்தம் என்பதை திரு. கிட்டப்பா அவர்களும் ஏற்றுக்கொள்வார்கள். நான் குறிப்பிட்டது ஏற்கனவே அந்தப் படங்கள் மக்கள் மத்தியிலே மிகுந்த செல்வாக்கு பெற்றவை என்பதால்தான். பல படங்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது ; அது வேறு பிரச்சினை. எந்த அடிப்படையில் திரைப்படங்களுக்கு வரி விலக்கு அளிப்பது என்பதைப் பற்றி நுணுகி ஆராய்வதற்காகவும் எந்த அடிப்படையில் சலுகைகள் வழங்கலாம் என்பதை ஆராய்வதற்காகவும் ஒரு குழு அமைக்கலாம் என்று அரசு கருதுகிறது.

திரு. அரைமுருகன் : தலைவரவர்களே, இந்த வரி விலக்கு அளிப்பதற்கான விதிகள் என்னென்ன அறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய படங்கள் அந்த விதிக்கு உட்பட்டு வருகின்றனவா என்பதை அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு செல்வாக்குள்ள படங்களுக்கு வரி விலக்கு அளிப்பதில்லை என்று குறிப்பிட்டார்கள். செல்வாக்குள்ள படங்களுக்கும் வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் அறிவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, ஏற்கனவே வரி விலக்கு அளிப்பதில் இரண்டு அடிப்படையை வைத்து அதன்படி வரி விலக்கு அளித்து இருக்கிறார்கள். அதில் ஒன்று தேசிய ஒருமைப்பாடு, அதாவது மொழி பாகுபாடு இன்மை என்ற தலைப்பின்கீழ் வருகிற படங்களுக்கு நேஷனல் இன்டெக்ரேஷன் அன்ட் ப்ரேக்கிங் டவுன் வேரியஸ் லாங்வேஜ் பேரியர்ஸ் என்ற அடிப்படையில் வருகின்ற படங்களுக்கு வரி விலக்கு அளிக்கப்படுகிறது. அது மட்டும் போதாது என்று சமுதாய, பொருளாதார சீர்திருத்த, அதாவது பொருளாதார சமுதாய ஏற்றத்தாழ்வுகளைப் போக்குகின்ற வகையிலே தயாரிக்கப்படுகின்ற படங்களுக்கு வரி விலக்கு அளிக்கின்ற வகையில் ஓர் உயர் மட்டக்குழு அமைத்து அதன் மூலம் பரிந்துரை பெறுவதுதான் பொருத்தம் என்று அரசு கருதுகிறது.